# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 88 /பேரூ/2024**
**நாள் : 22.01.2025**

திருமதி. க. முத்துலெட்சுமி,
நத்தம்,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நத்தம் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், ந.கோவில்பட்டி, லெட்சுமணபிள்ளை தெரு, பழைய கதவு எண்.8, புதிய எண்.4, என்ற முகவரியை சேர்ந்த திருமதி. க. முத்துலெட்சுமி என்பவரது 03.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.08.2024 அன்று பெறப்பட்டு, 88/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், ந.கோவில்பட்டி, லெட்சுமணபிள்ளை தெரு, பழைய கதவு எண்.8, புதிய எண்.4, என்ற முகவரியை சேர்ந்த திருமதி. க. முத்துலெட்சுமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 03.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டம், மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகின்றேன். எனது மாமியார் காலஞ்சென்ற திருமதி. ஆ. அடக்கியம்மாள் என்பவரின் பெயரில் 2 வீடுகளுக்கு சொத்து வரியினை திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பேரூராட்சியில் செலுத்தி வந்தேன். அது பற்றிய விபரம் பின்வருமாறு:

(a) வரிவிதிப்பு எண்.2779 அடக்கியம்மாள் ப.எண்.8, பு.எண்.4, லெட்சுமணபிள்ளை தெரு, ந.கோவில்பட்டி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

(b) வரிவிதிப்பு எண்.2853 அடக்கியம்மாள் எண்.4, லெட்சுமணபிள்ளை தெரு, ந.கோவில்பட்டி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

மேலே கூறிய விபரப்படி உள்ள எனது மாமியார் பெயரிலான வீடுகளுக்கு 2014-15ஆம் ஆண்டிற்கான சொத்து வரி 22.05.2024 அன்று செலுத்தினேன்.

இந்நிலையில் 2015-16ஆம் ஆண்டிற்கான சொத்துவரி செலுத்த நத்தம் பேரூராட்சி சென்ற போது வரி விதிப்பு எண். 2853 என்ற சொத்து வரி க. நாகலிங்கம் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்கள். அதன் பின்னர் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான விபரங்கள் குறித்து நத்தம் பேரூராட்சியில் கேட்டபோது தெரிவிக்க மறுத்துவிட்டார்கள். அதன் பின்னர் நான் பல்வேறு மேல் நடவடிக்கைகளுக்கு பிறகு நத்தம் பேரூராட்சி கொடுத்திருந்த விபரங்களை ஆய்வு செய்தபோது, நாகலிங்கம் என்பவர் தனக்குப் பாகப் பிரிவினை செய்து கொடுத்ததாக பொய்யான மற்றும் போலியான மற்றும் பதிவு செய்யப்படாத மோசடியான ஆவணங்களை கொடுத்திருந்தது தெரியவந்தது.

அவ்வாறு பொய்யான மற்றும் போலியான மோசடி ஆவணங்களை நத்தம் பேரூராட்சி, சட்டப்படி சரியான முறையில் ஆய்வு செய்யவில்லை. மேலும் சொத்துவரிதாரரான எனது மாமியார் (லேட்) அடக்கியம்மாள் குடும்பத்தினரான எனக்கு எந்த முன்னறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. விளக்கம் எதுவும் எங்களிடம் கேட்கவில்லை. அப்போது நத்தம் பேரூராட்சி செயல் அலுவலராக இருந்த திரு. வெங்கட்ரமணன் என்பவர் கடந்த 20.03.2015 அன்று எனது மாமியார் (லேட்) அடக்கியம்மாள் பெயரிலிருந்து நாகலிங்கம் என்பவர் பெயருக்கு அவர் கொடுத்திருந்த போலியான மற்றும் மோசடியான ஆவணங்களை வைத்து முறைகேடான முறையில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்துள்ளார். எனது மாமியார் (லேட்) திருமதி. அடக்கியம்மாள் என்பவரின் பெயரில் செலுத்தி வந்த 2014-15ஆம் ஆண்டிற்கான சொத்துவரி இரசீதுகள் உள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் ஆகிய தாங்கள் இது தொடர்பான விசாரணை செய்து மேற்கண்ட முறையில் நான் மேலே தெரிவித்திருப்பது உண்மை என தெரியவரும் பட்சத்தில் மோசடியான முறையில் நாகலிங்கம் என்பவர் பெயருக்கு சட்டவிரோதமான முறையில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ததை நீக்கம் செய்து மீண்டும் எனது மாமியார் அடக்கியம்மாள் பெயருக்கே மாற்றம் செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சியின் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 09.12.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சி காட்டுபெரியகுளம் தெருவில் உள்ள பழைய சொத்து வரிவிதிப்பு எண்.2853, புதிய சொத்து வரிவிதிப்பு எண்.3441. கதவு எண்.1 திரு. க. நாகலிங்கம் என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக ஆட்சேபனை கோரி புகார்

மனு வரப்பெற்றது. இதனைத் தொடர்ந்து நத்தம் பேரூராட்சி அலுவலக குறிப்பாணை கடித எண்.ந.க.எண்.936/2024 நாள் 02.12.2024ல் பெயர் மாற்றம் செய்ய சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களுடன் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. திரு. கருப்பன், த/பெ நாகலிங்கம், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் தனது விளக்க கடிதத்தில் தனது தந்தை திரு. நாகலிங்கம் என்பவர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு வீட்டில் உள்ளதால், அவரது மகனான திரு. கருப்பன் என்பவர் 06.12.2024 நேரில் ஆஜராகி மேற்கண்ட சொத்து தனது தந்தைக்கு 21.02.1979 அன்று ஊர் முக்கியஸ்தர்களின் முன்னிலையில் பாகசாசனம் பத்திரம் ஏற்படுத்தி, அதன் பின்பு வருவாய் துறையில் G.R. பட்டா எண்.400, புல எண்.215/37 என்ற எண்ணில் திரு. நாகலிங்கம் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் திருமதி. அடக்கியம்மாள் பெயரில் உள்ள சொத்துவரியை திரு. நாகலிங்கம் பெயரில் 2015ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திருமதி. முத்துலட்சுமி என்பவருக்கு புல எண்.508/7இல் உள்ள வீடு பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, பட்டா ஆவணத்தின் அடிப்படையில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என விளக்க கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சிக்குட்பட்ட காட்டுபெரியகுளம் தெருவில் உள்ள பழைய சொத்து வரி விதிப்பு எண்.2853, புதிய சொத்து வரிவிதிப்பு எண்.3441, கதவு எண்.1 திருமதி. அடக்கியம்மாள் என்பவர் பெயரில் இருந்த சொத்துவரியை வருவாய் துறையில் G.R. பட்டா எண்.400, புல எண்.215/37 என்ற எண்ணில் திரு. நாகலிங்கம் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் 2014-15 நிதியாண்டில் திருமதி. அடக்கியம்மாள் என்பவர் பெயரில் இருந்து திரு. க. நாகலிங்கம் என்பவர் பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து சொத்துவரி செலுத்தி வரப் பெறுகிறது. மேலும் வருவாய்த் துறையின் ஆவணங்களின் அடிப்படையில் திரு. க. நாகலிங்கம் என்பவருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சி செயல் அலுவலரும் 06.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.12.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி. க. முத்துலெட்சுமி என்பவர் 06.01.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரரான நத்தம் பேரூராட்சி செயல் அலுவலரான திரு. மு. விஜயநாத் என்பவர் 06.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் :-

- திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சியை சேர்ந்த திரு. நாகலிங்கம் என்பவர் நத்தம் பேரூராட்சிக்குட்பட்ட காட்டு பெரியகுளம் தெருவில் அமைந்துள்ள வீட்டிற்கு திருமதி ஆ. அடக்கியம்மாள் என்பவர் பெயரில் உள்ள சொத்து வரி (வரிவிதிப்பு எண்.2853) யினை தனது பெயருக்கு மாற்றம் செய்திட கோரியிருந்தார். அதன்படி, அலுவலக குறிப்பாணை கடித ந.க.எண்.936/2024 நாள் 02.12.2024ல் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களுடன் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு திரு. நாகலிங்கம் என்பவருக்கு தெரிவிக்கப்பட்டது.

- திரு. நாகலிங்கம் என்பவர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவரது சார்பாக அவரது மகன் திரு. கருப்பன் என்பவர் 06.12.2024 அன்று ஆஜராகி மேற்கண்ட சொத்து தனது தந்தைக்கு 21.02.1979ல் ஊர் முக்கியஸ்தர்களின் முன்னிலையில் பாக சாசனம் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என தெரிவித்தார்.

- பதிவுப் பாக சாசனம் பத்திரம் அடிப்படையில் வருவாய்த் துறையில் பழைய சொத்து வரி விதிப்பு எண்.2853, புதிய சொத்து வரி விதிப்பு எண்.3441, கதவு எண்.1 திருமதி அடக்கியம்மாள் என்பவரின் பெயரிலிருந்து வருவாய்த் துறையில் GR பட்டா எண். 400, புல எண்.215/37 என்ற எண்ணில் நாகலிங்கம் என்ற பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என வருவாய்த் துறை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

- மேற்காணும் வருவாய்த் துறை ஆவணத்தின்படி 2014-15 நிதியாண்டில் திருமதி. ஆ. அடக்கியம்மாள் என்பவரின் பெயரிலிருந்து திரு. நாகலிங்கம் பெயருக்கு சொத்து வரி மாற்றம் செய்யப்பட்டது என்பதனை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் நத்தம் பேரூராட்சியின் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் திருமதி. க. முத்துலெட்சுமி என்பவர் தனது 03.8.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சிக்குட்பட்ட எண்.4, லெட்சுமணபிள்ளை தெருவில் அமைந்துள்ள சொத்திற்கு மனுதாரரின் மாமியாரான திருமதி. ஆ. அடக்கியம்மாள் என்ற பெயரிலிருந்த சொத்து வரியினை (வரி விதிப்பு எண்.2853) நத்தம் பேரூராட்சி செயல் அலுவலரால் முறைகேடாக திரு. க. நாகலிங்கம் என்ற பெயருக்கு சொத்துவரி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து, மீண்டும் திருமதி. ஆ. அடக்கியம்மாள் பெயருக்கே மாற்றம் செய்ய கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நத்தம் பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண். 1. காட்டு பெரியகுளம் தெருவில் அமைந்துள்ள திருமதி. ஆ. அடக்கியம்மாள் என்பவரின் பெயரிலுள்ள பூர்விக சொத்தினை (வரி விதிப்பு எண்.2853) திருமதி. ஆ. அடக்கியம்மாள் மற்றும் அவரது மகனான திரு. நாகலிங்கம் என்பவர்கள் 21.02.1979 அன்று ஊர் முக்கியஸ்தர்களின் முன்னிலையில் பாக சாசன பத்திரம் ஏற்படுத்தி, பதிவு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, திரு. நாகலிங்கம் என்பவர் வருவாய்த் துறையில் GR பட்டா எண். 400, புல எண்.215/37 என்ற எண்ணில் தனது (திரு. நாகலிங்கம்) பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார்.

இந்நிலையில், திரு. நாகலிங்கம் என்பவர், திருமதி. ஆ. அடக்கியம்மாள் பெயரில் உள்ள சொத்து வரியை தனது (திரு. நாகலிங்கம்) பெயரில் மாற்றம் செய்திட நத்தம் பேரூராட்சியில் விண்ணப்பித்ததில், வருவாய்த் துறை ஆவணத்தின்படி 2014-15ஆம் நிதியாண்டிலிருந்து திருமதி. ஆ. அடக்கியம்மாள் பெயரில் இருந்த சொத்து வரியினை (பழைய சொத்து வரி விதிப்பு எண்.2853) திரு. நாகலிங்கம் என்பவரின் பெயருக்கு சொத்து வரி (புதிய சொத்து வரி விதிப்பு எண்.3441) மாற்றம் செய்யப்பட்டுள்ளதை நத்தம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 22ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. க. முத்துலெட்சுமி,
பழைய கதவு எண்.8, புதிய எண்.4, நத்தம்,
லெட்சுமணபிள்ளை தெரு, ந.கோவில்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம் - 624 401.

2. செயல் அலுவலர்,
நத்தம் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

23/1/25

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032